# யக்ஷப் ப்ரஸ்னம் பகுதி- 3

Post No. 793 Date: 19 ஜனவரி 2014

தொகுப்பும் விளக்க உரையும்:-- லண்டன் சுவாமிநாதன்

123 கேள்விகளில், முதல் இரண்டு பகுதிகளில் வெளியான கேள்விகளையும் எனது விளக்க உரையையும் படித்துவிட்டு இந்த மூன்றாவது பகுதியைப் படிக்க வேண்டுகிறேன்.

**86.சூரியனை உதிக்கச்செய்வது எது?**

பிரம்மம் (கடவுள்)

**87.சூரியனுக்கு இருபுறமும் செல்வோர் யாவர்?**

தேவர்கள்

**88.சூரியனை அஸ்தமிக்கச்செய்வது எது?**

தர்மம் (அதாவது இயற்கை விதிகள். உலகமே ஒரு கட்டுப்பாட்டில் இயங்குகிறது. இதை வேதம் 'ருதம்' என்று சொல்லும். ஆங்கிலச் சொற்களான Rhythm ரிதம், Truth ட்ரூத், பெண்களின் பெயரான Ruth ரூத் எல்லாம் இந்த சொல்லில் இருந்து பிறந்தவையே.

**89.சூரியன் எதனால் வாழ்கிறான்?**

சத்தியத்தால் (மேற்கூறிய விடை இதற்கும் பொருந்தும்)

**90.எப்படி ஒருவன் வேத பண்டிதன் ஆகிறான்?**

கற்றுக் கொள்வதால்

வேதக் கல்வி உலகில் ஒரு அதிசயமான கல்வி. அதை எழுதிப் படிக்கக்கூடாது. சங்கத் தமிழ் புலவர்கள் அதை 'எழுதாக் கற்பு' என்று புகழ்வர். மறை (பரம ரகசியம்) என்றும் போற்றுவர். ஆயிரக் கணக்கான

ஆண்டுகளாக வாய் மூலமாகவே பரப்பப்படும் இலக்கியம். இன்றுவரை இம்முறை நீடித்தாலும் பிராமணர்கள் பிழைப்புக்காக பல தொழில்களை நாடிவிட்டதால் வேத அத்தியயனம் அருகி வருகிறது. யுனெஸ்கோ இதை உலகின் பாரம்பர்ய சொத்து என்று அறிவித்து ஆதரவு தருகிறது. ஆனால் இதை அழியாமல் காக்கும் பொறுப்பு பிராமண ஜாதியிடமே இருக்கிறது. எத்தனை சி.டி., டேப்புகள் இருந்தாலும் காலை 4 மணிக்குப் பிரம்ம முகூர்த்தத்தில் உடகர்ந்து மனப்பாடம் செய்வதற்கு ஈடு இணை உலகில் எங்குமே இல்லை!

**91.ஒரு மனிதன் மேன்மை அடைவது எப்படி?**

தவத்தினால்

தவம் என்பது ஆழமான பொருளை உடையது. திருவள்ளுவன் கொஞ்சம் கூடக் கூசாமல் இரண்டு சம்ஸ்கிருத சொற்களை இரண்டு முன்று இடங்களில் பயன்படுத்துகிறான். தானம், தவம் என்னும் சொற்கள் அவை.

**தானம் தவம் இரண்டும் தங்கா வியன் உலகம்**

**வானம் வழங்காது எனின்** (குறள் 19)

“மழை பெய்யாதாயின் அகன்ற உலகின்கண் தானமும் தவமுமாகிய இரண்டு அறமும் உளவாகா”--- என்பது பரிமேலழகர் உரை.

“தவமாவது மனம் பொறிவழி போகாது நிற்றற்பொருட்டு விரதங்களால் உண்டி சுருக்கல் முதலாயின. பெரும்பான்மை பற்றி தானம் இல்லறத்தின் மேலும் தவம் துறவறத்தின் மேலும் நின்றன”--- என்பார் பரிமேலழகர்.

ஆக தவம் என்பது கண்ணை மூடிக்கொண்டு தியானம் செய்வது மட்டுமல்ல. மனம், வாக்கு, காயம் (உடல்) ஆகிய மூன்றிலும் கட்டுப்பாடுடன் வாழ்வது.

**“தானமும் தவமும் செய்வாராயின்**

**வானவர் நாடு வழிதிறந்திடுமே**”--- என்று அவ்வையார் கூறுகிறார்.

**92.எதனால் ஒருவன் இணை பிரியாத துணையை அடைவான்?**

திடச் சித்தத்தால் இணை பிரியாத துணையை அடைவான்.

எந்த ஒரு காரியம் வெற்றி பிறவும் திட உறுதி வேண்டும்.
விடாமுயற்சியுடன் செய்தால்தான் வெற்றி கிட்டும்.

இதனால்தான் 'எறும்பூரக் கல்லும் தேயும்' என்றும் 'அடிக்க அடிக்க அம்மியும் நகரும்' என்றும் தமிழ் பழமொழிகள் அறிவுரை பகரும்.

ஆங்கிலத்திலும்

"Genius is one percent inspiration, ninety-nine percent perspiration"-- **என்று சொல்வர்**.

திருவள்ளுவர் இது பற்றி முப்பது குறட்பாக்களை எழுதிவிட்டார். வினைத் தூய்மை, வினைத் திட்பம், வினை செயல்வகை என்று எழுதியதோடு முயற்சி பற்றியும் தனியே எழுதிவிட்டார்.

**வினைத் திட்பம் என்பது ஒருவன் மனத் திட்பம்**

**மற்றைய எல்லாம் பிற** (661)

என்கிறார். மன உறுதிதான் முக்கியம். மற்றவை எல்லாம் இரண்டாம் பட்சம்தான் என்பது அவர் கருத்து.

**93.எதனால் ஒருவன் புத்திமான் ஆவான்?**

பெரியோரை வணங்குவதால்.

பெரியோரின் துணை வேண்டுமானால் அவர்களைப் போற்ற வேண்டும். அவர்களைப் போற்றுவதற்கு ஒருவனிடம் அடக்கமும் பணிவும் தேவை. ஆதிகாலத்தில் குரு குலக் கல்வி முறையில் இந்த முறை இயற்கையிலேயே இருந்தது. இப்பொழுது இது இல்லை. இதனால் ஒருவனுக்கு அறிவு வளர்ந்தாலும் அடக்கமும் ஒழுக்கமும் இல்லாமையைக் காண்கிறோம். இது நாட்டிலும் வீட்டிலும்ஏற்படுத்தும் தாக்கங்களைப் பத்திரிகைகள் வாயிலாக நாள்தோறும் படிக்கிறோம்.

திருவள்ளுவர் இது பற்றி பத்து குறட்பாக்களை எழுதிவிட்டார். ‘பெரியாரைத் துணைக்கோடல்’ என்ற அதிகாரத்தில்

**உற்ற நோய் நீக்கி உறா அமை முற்காக்கும்**

**பெற்றியார்ப் பேணிக் கொளல்** (441)

பெரியார் துணை இருந்தால், முதலில் வந்த பிரச்சனைக்குத் தீர்வு சொல்லுவார். அதைவிடப் பெரிய உதவி--- இனிமேல் அந்தச் சிக்கல் வராமல் தடுப்பது எப்படி--- என்றும் சொல்லித் தருவார் என்பார் வள்ளுவர். அத்தகைய ஆட்களுடன் தொடர்பு வையுங்கள் என்கிறார். அவர் சொல்லுவது ‘கிரிமினல் ப்ரெயின்’ (Criminal Brain) போன்ற ஆட்கள் அல்ல. நேர்மையான ஆட்கள்.

**94.பிராமணர்களுக்கு சிறப்பு (தேவத்வம்=தெய்வீகத்தன்மை) தருவது எது?**

வேத அத்தியயனம்.

இன்று வேதக் கல்வி கற்று, அதற்குத் தக நிற்காத எவரும் இந்தத் தெய்வீகத்தன்மையையோ அதற்குரிய மரியாதையையோ எதிர் பார்ப்பது நியாயமே இல்லை.

பிராமணர்களின் வேதக் கல்வியை வள்ளுவன் பல இடங்களில் புகழ்வான். ஒரு நாட்டில் நல்ல தர்ம ஆட்சி நடக்காவிடில் “அறுதொழிலோர் நூல் (வேதம்) மறப்பர்” (560) என்றும் மற்றொரு இடத்தில் “மறப்பினும் ஒத்துக் கொளல் ஆகும் பார்ப்பான் பிறப்பு ஒழுக்கம் குன்றக் கெடும்” (134) என்றும் பாடுகிறார். பிராமணனுக்கு வேதக் கல்வி முக்கியம்தான். ஆனால் அதைவிட முக்கியம் அவனுக்கு விதிக்கப்பட்ட ஒழுக்க நெறிகள் என்கிறார்.

**95.சாதுக்களுக்கு தர்மம் எது?**

தவம்.

தவத்தின் பெருமையை முன்னரே கண்டோம்.

**96.சாதுக்களுக்கு மனிதத் தன்மை எது?**

மரணம்.

உலகில் தோன்றிய எல்லாம் அழியவேண்டும் என்பது இயற்கை நியதி. இதற்கு யாரும் விதி விலக்கு அல்ல. ஒரே ஸ்லோகத்தில் இக்கேள்வி வருவதால் முந்தைய வேத அத்தியயனத்தையும் இதையும் சேர்த்துப் படிக்க வேண்டும். ஒருவனுடைய கல்வி அறிவு ஏழு ஜன்மங்களுக்கும் மேலாக வரும். 'ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு எழுமைக்கும் ஏமாப்பு உடைத்து' (398) என்பான் வள்ளுவன். இதே கருத்தை பகவத் கீதையிலும் (6-43) காளிதாசனிலும் (ரகுவம்சம் 1-20; 18–50) காணலாம். ஆக மரணம் என்பது உடலுக்கே. அறிவு என்பது ஜன்மம் தோறும் தொடரும்.

**97.பிராமணர்கள் செய்யக்கூடாதது/ செய்ய மாட்டாதது எது?**

தெய்வ நிந்தனை.

அதாவது யார் ஒருவன் நாத்திகம் பேசுகிறானோ அவன் அறவோன் (அந்தணர்) அல்ல. 'நாத்திகம் பேசி நாத் தழும்பு ஏறினர்' என மாணிகவாசகர் ஏசுகிறார். வள்ளுவனோ அத்தகைய ஆட்களைப் பேய்ப் பயல் என்று திட்டித் தீர்க்கிறார்:-

**உலகத்தார் உண்டு என்பது இல்லென்பான் வையத்து**

**அலகையா வைக்கப்படும்** (650)

"எல்லோரும் இருக்கிறார் என்று சொல்லும்போது இல்லை என்று சொல்லுபவன் மனித வடிவில் வந்த பேய்"--- என்று வசைபாடுவான் வள்ளுவன்.

**98.க்ஷத்ரியர்களுக்கு சிறப்பு (தேவத்வம்=தெய்வீ கத்தன்மை) தருவது எது?**

அம்பும் அஸ்திரமும் அவர்களுக்கு சிறப்பு தருவன.

அதாவது போரிடுவதும், ஆயுதங்களைத் தாங்குவதும் அவர்களுக்குரிய தெய்வத் தன்மை. ராணுவத்தில் வேலை செய்யும் சிப்பாய், அகிம்சை

பற்றிப் பேச முடியாது. போரில் இறப்போர் சுவர்க்கம் புகுவர் என்று புறநானூறும் பகவத் கீதையும் சொல்லுவதை "புறநானூற்றில் பகவத் கீதை" என்ற கட்டுரையில் தந்துள்ளேன்.

99.**க்ஷத்ரியர்களுக்கு தர்மம் எது**?

க்ஷத்ரியர்களுக்கு தர்மம் யாகம் செய்வது. தர்மன், ராஜசூய யாகம் செய்ததைப் போலவே சோழன் பெருநற்கிள்ளி ராஜசூய யாகம் செய்தான். அப்போது சேர சோழ,பாண்டியர் மூவரும் மேடையில் அமர்ந்ததைப் பார்த்த அவ்வையார் அசந்தே போய்விட்டார். அவர் பாடிய பாடல் புறநானூற்றில் இருப்பதை முன்னரே எழுதிவிட்டேன். முதுகுடுமிப் பெருவழுதி என்ற பாண்டியன் செய்த அஸ்வமேத யக்ஞக் காசுகள் தமிழ் நாட்டில் சமீப காலத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. கரிகாற் சோழன் பருந்துவடிவ யாக குண்டம் வைத்து மாபெரும் யாகங்கள் செய்ததை தனியே படத்துடன் எழுதி இருக்கிறேன். கரிகாற் சோழனின் பருந்துவடிவ யாக குண்டம் என்ற கட்டுரையில் காண்க. இந்தியாவிலுள்ள பெரும்பாலான கல்வெட்டுகள் யாகம், தானம், கோவில் பற்றியவையே!!

உலக மகாகவி காளிதாசன், இந்துமதி சுயம்வரத்தில் ஒவ்வொரு மன்னராக அறிமுகம் செய்யும் கட்டத்தில் பாண்டிய மன்னன் பற்றிக் கூறுகையில் யாக நீரில் நனைந்தவன் (Avabruda Snana) என்பான். அதாவது முதுகுடுமிப் பெருவழுதி போல எல்லோரும் யாகப் பிரியர்கள்!!

100.**க்ஷத்ரியர்களுக்கு மனிதத் தன்மை எது**?

பயம்.

அதாவது பயப்படுபவன் வீ ரன்அல்ல என்பதே இதன் உட்கருத்து. ஒரு போர் வீ ரன்பயந்து பின் வாங்கினால் அவன் வீ ரன்அல்ல. வீ ரமாதாவும் வீ ரஅன்னையும் என்ற கட்டுரையில் புற நானூற்றில் நாம் காணும் வீ ர அன்னையையும் வேதத்தில் நாம் காணும் வீ ரமாதாவையும் பற்றி எழுதி இருக்கிறேன்.

**101.க்ஷத்ரியர்களுக்கு செய்யக்கூடாதது/ செய்ய மாட்டாதது எது?**

சரண் அடைந்தவர்களைக் கொல்லுவதோ, போர்க்களத்தில் வீ ரர்களைக் கைவிட்டு ஓடுவதோ மஹா பாவம். விபீஷண சரணாகதி என்னும் படலத்தில் வால்மீகியும் கம்பனும் இதைப் பற்றி விரிவாகவே பேசியுள்ளனர். ஐ.நா. சபை மற்றும் பல (ஜெனீ வா Geneva Convention) உடன்படிக்கைகள் ஆகியனவும் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்துக்கள் என்ன சொன்னார்களோ அதையே சொல்லுகின்றன. இந்த சிந்தனை வேறு நாட்டுப் பழைய இலக்கியங்களில் இருப்பதாகத் தெரியவில்லை.

இனி வேதம் பற்றிய கேள்விகள். இவைகளுக்கு வேத விற்பன்னர்களும், காஞ்சி பரமாசார்ய சுவாமிகள் போன்ற மகான்களுமே விளக்கம் சொல்ல முடியும்.

**102.யாகத்துக்குரிய ஒரே சாமம் எது?**

பிராணன் தான் ஸாமகானம்.

**103.யாகத்துக்குரிய யஜுர் வேத மந்திரம் எது?**

மனதுதான் ஒரே யஜுர் வேத மந்திரம்

**104.யாகம் எதை முக்கியமாக வேண்டுகிறது?**

ருக்வேதத்தை முக்கியமாக வேண்டுகிறது.

**105.யக்ஞம் எதை மீற இயலாது?**

ருக்வேதத்தை முக்கியமாக வேண்டுகிறது. அதை மீறிச் செல்ல இயலாது.

(ஸ்ரீ மஹாபாரத ஸாரம் என்ற நூலில் இருந்து சில பகுதிகளை எடுத்துள்ளேன். சென்னை மயிலாப்பூர் ராமகிருஷ்ண மடம் வெளியிட்ட அருமையான நூல். நமது காலத்தில் வாழந்து மறைந்த மாபெரும் வேத அறிஞர் அண்ணா அவர்கள் தொகுத்தது. அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டிய நூல். ஸ்லோகங்கள் மஹாபாரத மூலத்தில் உள்ளபடியே சம்ஸ்கிருதத்தில் இருப்பது இதன் சிறப்பு.)

106.**விவசாயிகளுக்கு எது சிறந்தது**?

மழை.

மழையின் சிறப்பை முன்னரே கண்டோம்.

107.**விதைப்பவர்களுக்கு எது சிறந்தது**?

நல்ல விதை.

இங்கே விதை என்பதை ஒருவனின் நல்ல செயல்கள் என்றும் வியாக்கியானம் செய்யலாம்..

தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்ற பழமொழி தமிழில் உள்ளது போலவே பல்வேறு மொழிகளிலும் இருக்கிறது.

108.**மேன்மை நாடுவோருக்கு சிறந்தது**?

பசு.

இந்துக்கள் கண்டுபிடித்த மாபெரும் கண்டுபிடிப்பு பசுமாடு. வேதம் முழுதும் பசுவும் காளையும் போற்றப்படுகின்றன. பசுவை தெய்வமாக மதிக்கும் ஒரே இனம் இந்து இனம்தான். பசும் பாலை அமிர்தமாக தருமன் வருணித்ததை முன்னொரு கேள்வியில் கண்டோம். இன்றுவரை தாய்ப் பாலுக்கு அடுத்தபடியாக மதிக்கப் படுவது பசும் பால். கோ மாதா என்று இந்துக்கள் வழிபடுகின்றனர். ஆவுரித்துத் தின்னும் புலையர் என்று தேவார

திருவாசகம் பழிப்பதைக் காணலாம். மாடு தின்னும் புலையா உனக்கு மார்கழித் திருநாளோ என்ற பாட்டை அறியாதார் யார்? இந்துக்களை வேறு இனங்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டுவது பசு தான். இந்துக்களைத் தவிர உலகமே பசு மாமிசம் சாப்பிடும். Mad Cow Disease "மேட் கௌ டிஸ்ஸீஸ்" என்ற நோய் வந்தவுடன் மேலை நாடுகள் பயந்துகொண்டு மில்லியன் டன் கணக்கில் பசு மாமிசத்தை நாசம் செய்தனர். மிருகங்களைக் கொல்ல அஞ்சாத மிருகங்கள் மேல்நாட்டினர்!! இந்த நோய் மனிதனுக்கும் பரவமுடியும் என்ற செய்தி வந்தவுடன் ஐரோப்பாவில பசு மாமிசம் விற்பனை வீ ழ்ந்தது இதையெல்லாம் அறிந்து தான் இந்துக்கள் இப்படிச் (Ban on Beef) செய்தனரோ என்று நான் வியந்ததுண்டு.

109.**பிரசவிப்போருக்கு எது சிறந்தது**?

புத்திரன்.

ஆண்மகன் பற்றி புறநானூற்றிலும் தர்ம சாஸ்திரங்களிலும் இருப்பதை முன்னரே கண்டோம்.

110.**இருந்தும் இறந்தவன் யார்**?

கடவுள், விருந்தாளி, வேலைக்காரர்கள், இறந்துபோன முன்னோர்கள், ஆத்மா ஆகியோரைத் திருப்தி செய்யாதவன் மூச்சுவிட்ட போதிலும் உயிரற்றவனுக்குச் சமம்.

இதையே தெய்வப் புலவன் திருவள்ளுவன் 'நீத்தார் பெருமை' என்ற அதிகாரத்திலும் குறள் 43–லும் வலியுறுத்துவார்:-

**தென்புலத்தார், தெய்வம், விருந்து ஒக்கல் தான் என்று ஆங்கு**

**ஐம்புலத்து ஆறு ஓம்பல் தலை**.

தெய்வம் என்ற சம்ஸ்கிருத் சொல்லையும் தென்புலத்தில், இறந்தோர் வாழும் இந்துமதக் கோட்பாட்டையும் (pancha Mha Yagna) வள்ளுவன் அப்படியே பிரயோகித்து இருப்பதை ஈண்டு நோக்கவும்.

**111.நிலை தவறாமை என்று ரிஷிகள் எதைக் கூறுகின்றனர்?**

தனது கடமையில் உறுதியாக இருத்தல் நிலைதவறாமை ஆகும்.

பகவத் கீதை முழுதும் இந்தக் கருத்தை வலியுறுத்துகிறது. அர்ஜூனன் ஒரு போர்வீ ரன் அவன் திடீரென சண்டைபோட மறுத்தவுடன் கண்ணன் சொன்னது இதே கருத்துதான்.

நீதிபதி ஆசனத்தில் அமர்ந்திருப்பவர் ஒரு கொலைகாரனுக்கு மரணதண்டனை கொடுக்கமட்டேன் என்று ஓடமுடியாது. மருத்துவ மனையில் வேலை செய்யும் ஒரு டாக்டர், 'இவன் ஒரு தேசவிரோதி அல்லது பயங்கரவாதி' என்று சொல்லி ஆபரேஷன் தியேட்டரில் இருந்து ஓடமுடியாது. அவருடைய கடமை நோயாளியைக் கவனிப்பது.

**112.எது தைரியம்?**

மாவீ ரன்யார்? என்ற கட்டுரையில் இது பற்றி ஏற்கனவே விரிவாக எழுதிவிட்டேன். சமண மத 24-ஆவது தீர்த்தங்கரர் மஹாவீ ரரையும் அனுமனையும் மட்டுமே இந்திய இலக்கியங்கள் மாவீ ரன்என்று சித்தரிக்கின்றன. மற்ற கலாசாரங்கள் (AK 47) ஏ.கே47–ஐ சுழற்றுபவர்களை மாவீ ரன்என்று சித்தரிக்கும்.

"புலன் ஐந்தும் வென்றான் தன் வீ ரமே வீ ரம்- என்பது அவ்வையாரின் வாக்கு மட்டும் அல்ல, இந்துக்களின் துணிபு.

**113.எது தானம்?**

உயிர்களைக் காத்தல்.

ஒருவனுக்கு உயிர்ப்பிச்சை கொடுப்பதே பெரிய தானம்.

**114.எங்கும் நிறைந்தவர் யார்?**

பிரம்ம ஞானி

சுகம்–துக்கம், தட்பம்–வெப்பம், தங்கம்–ஓட்டஞ்சல்லி,ஆசை–வெறுப்பு போன்ற இருமைகளைக் கடந்து பிரம்மத்தை மட்டுமே காண்பவர் பிரம்ம ஞானி.

**115.உயிர் வாழ்வோரில் எல்லாம் அடைந்த புருஷன் யார்?**

பலனை எதிர்பாராமல் கடமையைச் செய்தவன் எல்லோர் நெஞ்சிலும் நிறைந்தவன்- அவனே புருஷன் எனப்படுவான்.

**116.எது கெட்ட பழக்கம்?**

மற்றவர்கள் பற்றிக் கிசு கிசு செய்திகளைச் சொல்லுவது

**117. எது தற்பெருமை?**

தான் ஒருவனே தருமத்தைப் பின்பற்றுவதாக பேசுவதே தற்பெருமை.

**118.அதிர்ஷ்ட தேவதை யார்?**

ஒருவன் செய்யும் தர்மம்.

**119.யார் நாஸ்தீகன்?**

பிற (மேல்) உலகங்களை நம்பாதவன் நாத்திகன்.

**120.யார் அறிஞன்?**

தர்மத்தையும் அதன் செயல்பாட்டையும் அறிந்தவன்

**121.நண்பர்கள் விலகிப்ப் போவது ஏன்?**

ஒன்றும் கிடைக்காததால்.

**122.உலகம் என்பது என்ன?**

ஆன்மா

**123. எது தொடர்ந்து செல்வம் நல்கும்?**

விடா முயற்சி திருவினை ஆக்கும்

**124. உலகம் முழுதும் நிறைந்தது எது?**

காற்று

**125. ஒருவன் கடைசியாக அடையும் சிறந்த இடம்?**

தானதருமம்.

யக்ஷன், "அரசனே ! நான் கேட்ட கேள்விகட்கு நன்கு விடை கூறினாய். மாண்டுபோன உனது சகோதரர்களில் உனக்கு விருப்பமானவர் யார்? அவரை உயிர்ப்பிக்கிறேன்" என்றது.

"நகுலனை உயிர் பிழைக்க வை" என்று தர்மர் வேண்டினார்.

யக்ஷனுக்கு ஒரே ஆச்சர்யம். "பலத்தில் விஞ்சிய பீமனை விட்டுவிட்டு, வில் ஆற்றலில் சிறந்த அர்ஜுனனை விட்டுவிட்டு, மாற்றாந்தாயின் மகனான நகுலனை எழுப்பச் சொல்கிறாயே என்ன காரணம்?" என்று யக்ஷன், கேட்டான்

"யக்ஷனே நான் ஒருபோதும் தருமத்தை விட மாட்டேன். என் தகப்பனுக்கு குந்தி ,மாத்ரி என்ற இரண்டு மனைவியரில் குந்திக்கு நானும் மற்றொருவரான மாத்ரிக்கு நகுலனும் மகனாக உயிருடன் இருக்கட்டும் என்றே நான் இப்படிக் கேட்டேன்" என்றார் தருமர்.

தருமரின் பதிலில் திருப்தி அடைந்த யக்ஷன் எல்லோரையும் மூர்ச்சை தெளிந்து உயிர் பிழைக்க வைத்தான்.

"யக்ஷனை நீ யார்?" என்று தருமர் கேட்கவே நான் "தான் தருமதேவதை, உனது தந்தை' என்றும் தர்மனின் நீதி நேர்மையை சோதிக்கவே இப்படி

யக்ஷனாகவும், முன்னர் மானாகவும் வந்து அரணிக் கட்டையைப் பறித்ததாகவும் கூறினான்.

மூன்று வரங்கள் (Three Boons)

யக்ஷன் மூன்றுவரங்களைத் தர முன்வதவுடன், தருமன் கீழ்கண்ட 3 வரங்களைக் கேட்கின்றான்;

1.முனிவரிடமிருந்து மான் பறித்த அரணிக்கட்டை அவருக்குக் கிடைக்கவேண்டும்

2.எங்களுடைய 12 வருட வனவாசம் முடிந்துவிட்டது. இப்போது மறைந்து வாழும் வகையில் (அஞ்ஞாத வாசம்) ஓராண்டு இருக்கவேண்டும். அது வெற்றி பெற அருள் புரிய வேண்டும்

3.லோபம்,க்ரோதம்,மோஹம் இவை நீங்கி எனக்கு தானம், தவம், சத்தியத்தில் பற்று இருக்கவேண்டும்.

இந்த மூன்று வரங்களையும் மனமகிழ்ச்சியோடு யக்ஷன் அருளினான்.

(மேற்கூறிய கேள்விகளில் பல, மஹாபாரத பதிப்பு எல்லாவற்றிலும் இராது. ஒரு லட்சம் (நூறாயிரம்) ஸ்லோகங்களைக் கொண்ட உலகிலேயே மிக நீண்ட நூல் என்று சொல்லப் பட்டாலும் 80,000 ஸ்லோகங்களே பெரும்பாலும் கிடைக்கின்றன. அத்தோடு ஹரிவம்சம் முதலிய பதிப்புகளைச் சேர்த்தால் நூறாயிரம் வரும். ஆகவே சில கேள்விகள் மிகைப்படத் தோன்றலாம். எது எப்படியாகிலும் அவை கூறும் கருத்துகள் என்றும் மாறாத உண்மைகள் என்பதால் எத்தனை முறை படித்தாலும் தகும்.)

யக்ஷப் ப்ரஸ்னம் படிப்பதால் ஏற்படும் நன்மைகளை முதல் பகுதியிலேயே கொடுத்துவிட்டேன்.

Contact swami_48@yahoo.com